4. அறிவிப்பு

கட்சித் தலைவர்கள் தவறான தகவல்களைப் பேட்டியாக அளிப்பதைத் தவிர்த்தல் – பேரவைத் தலைவர் ஆணை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவையில் நடைபெறும் விவாதங்களையும், இதர நடவடிக்கைகளையும் ஒழுங்குபடுத்துகிற மிக முக்கியப் பொறுப்பு பேரவைத் தலைவர் என்ற முறையில் எனக்கு உள்ளது. அவையில் நடைபெறும் விவாதங்களில் உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையைக் கருத்தில்கொள்ளாமல், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தங்கள் ஜனநாயகக் கடமையைச் சிறப்பாக ஆற்றுவதற்கு அதிகமான நேரம் ஒதுக்கப்பட்டு வருகிறது. இன்னும் சொல்லப் போனால், ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் பேசுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டு, அந்த நேரம் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுவதற்கு ஒதுக்கப்படுகிறது என்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள்.

இச்சட்டமன்றத்தில் உள்ள கட்சித் தலைவர்கள் சிலர், பத்திரிகைகளுக்குப் பேட்டி அளிக்கும்போது, பேரவையில் மக்கள் பிரச்சினைகள் குறித்துப் பேச அனுமதி மறுக்கப்படுவதாகப் பத்திரிகைகளுக்குப் பேட்டி கொடுத்துள்ளனர். ஆனால், அவைக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

தேசிய முற்போக்கு திராவிட கழகத்தைச் சேர்ந்த திரு. விஜயகாந்துக்கு ஆளுநர் உரை விவாதம் நடைபெற்றபோது, 29–5–2006 அன்று 8 நிமிடமும், நிதிநிலை அறிக்கையின்மீதான விவாதம் நடைபெற்றபோது, 28–7–2006 அன்று 19 நிமிடமும், மானியக் கோரிக்கைகளின்மீதான விவாதத்தில் 4–8–2006 அன்று 17 நிமிடமும், 11–8–2006 அன்று 14 நிமிடமும், 17–8–2006 அன்று 5 நிமிடமும் ஒதுக்கப்பட்டுள்ளன. ஒரே ஒரு உறுப்பினரைக் கொண்ட தேசிய முற்போக்கு திராவிட கழகத்திற்கு மொத்தம் ஒரு மணி 3 நிமிடம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், 94 உறுப்பினர்களைக் கொண்ட ஆளுங்கட்சிக்கு 12 மணி நேரம் 30 நிமிடம்தான் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். எனவே, சட்டமன்ற உறுப்பினர்கள், பத்திரிகைகளுக்கு இதுபோன்று தவறான தகவல்களைப் பேட்டியாகக் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)